SRI V. K. KOTHANDARAMAN : ஹோட்டல் சொந்தக்காரர்கள் எப்படி ஹோட்டல் சொந்தக்காரர்களின் பெயர்களை மாற்றியோ, ஹோட்டல் போர்டுகளை மாற்றியோ ஹோட்டல் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கிறார்களோ, அதே போன்று சினிமாத் தியேட்டர் தொழில் நடத்துபவர்களும் தியேட்டர் சொந்தக்காரர்களின் பெயர்களை மாற்றியும் தியேட்டர்களின் பெயர்களை மாற்றியும் அந்தத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்துவருவது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இனிமேலாவது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த மாதிரி புகார்கள் வந்தால் அதை தொழில் இலாகா கவனிக்கும். அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் வரவில்லை.

SRI N. K. PALANISAMI : Sir, for instance, one Lakshmi Theatre was in the name of a woman but when the workers working there demanded more wages, she registered the theatre in her husband's name. The name of the theatre was also changed to Mahalakshmi Theatre. But the Hon. Minister was saying that whenever there was any dispute it would be referred to the Tribunal. In this case how could they refer the matter to the Tribunal?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is putting a question in the nature of a question of law. Actually whenever there is a dispute, we try to bring into the dispute those persons who are in occupation of the factory or theatre or persons who are actually in charge of it so that the Court may come to a decision regarding the persons liable to come under the dispute.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY.

MR. SPEAKER : I have received from the hon. Member Sri M. Kalyanasundaram a notice of Motion under rule 54. The Motion runs as follows :—

" This House expresses its want of confidence in the Ministry, of which Sri K. Kamaraj Nadar is the Chief Minister."

Under rule 54 of the Assembly Rules, I do not see there is any objection to this Motion. I have permitted it. I want to know whether the requisite number of Members will stand in support of this Motion.

Most of the hon. Members belonging to the Opposition Parties rose from their seats.

MR. SPEAKER : More than 25 Members required by the rule have risen. Therefore, the hon. Member has the leave of the House to move the Motion. With regard to the fixing of the day for the moving of the Motion, I have to request the Hon. the Leader of the House to say if he has any suggestions to make.

26th October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திற்கு நாள் நிர்ணயிக்கும் முன்பு சில விஷயங்களை இந்தச் சபையின் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். நாள் நிர்ணயம் செய்வதைக் குறித்து, காரிய ஆலோசனைக்குழு முன் இந்தச் சபை எந்தெந்த விஷயங்களை எந்தெந்த நாட்களில் விவாதிக்கவேண்டும் என்று முடிவு செய்வதற்காக கூடி, ஆலோசிக்கப்பட்டபோது இந்த மாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றும், அதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்பதை பற்றியும், அதற்கு ஒரு நாள் குறிப்பிடுவதைப் பற்றியும், ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே கலனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது எல்லோரும் ஏகோபித்து ஒப்புக் கொண்டது என்னவென்றால் நம்பிக்கையில்லா தீர்மானம் என்று தனிப்பட்ட ஒன்று தேவையில்லை ; ராமநாதபுரம் சம்பவங்களைப் பற்றி உள்நாட்டு மந்திரி அவர்கள் ஒரு அறிக்கை இங்கு சமர்ப்பிப்பது என்றும், அந்த அறிக்கையின் பேரில் 28, 29-ம் தேதிகளில் விவாதம் நடக்கும்போது, அந்த விவாத அடிப்படையில், ஏதாவது ஒரு திருத்தத் தீர்மானம் கொடுத்து அதற்குத் தங்களுடைய ஆதரவை தரும் முறையில் விவாதத்தை நடத்திக் கொள்ளலாம் என்ற ஏகோபித்த முடிவுக்கு வந்தோம். அந்தக் கூட்டத்தில் எதிர் கட்சித் தலைவர் அவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும்—கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர—அக்கூட்டத்தில் பங்கு கொண்டனர். அந்தத் தீர்மானத்தை மாற்றிக் கொள்வதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்த விதமான மதிப்பு கொடுக்காவிட்டாலும், சபைக்குத் தலைவன், அதாவது லீடர் ஆப் தி ஹவுஸ், என்பதைக் கருதியாவது இந்த விஷயத்தில் எதிர் கட்சியில் உள்ள நாங்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டதை மாற்றிக் கொள்ள வேண்டியது என்பதைப் பற்றி ஒரளவாவது என்னிடம் சொல்லியிருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இப்படி காரிய ஆலோசனைக் குழு என்று ஒன்று வைத்து, எதிர் கட்சித் தலைவர்கள் எல்லோரும் கூடி முடிவு செய்வது என்பதில் அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது. அப்போது அந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே, 28, 29 தேதிகளில் ராமநாதபுரம் சம்பவங்களைப் பற்றி விவாதிப்பதாக முடிவு செய்திருந்தோம். இந்தத் தீர்மானம் வந்திருக்கின்ற காரணத்தால், 28, 29 தேதிகளில், அந்த அறிக்கையின் மீது விவாதம் நடத்துவதில் அர்த்தம் இல்லை. ஆகையால், சபாநாயகர் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லையானால், 28-ம் தேதிலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக நிர்ணயம் செய்து, அதற்கு எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் ஒதுக்கி, சபா நாயகர் அவர்கள் முடிவு செய்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறேன். அதற்கு மேலும் மாற்றிக் கொள்ளுவதில் ஆட்சேபணை எதுவும் இல்லை. ஆகையால் 28-ம்தேதியிலிருந்து இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று நான் என்னுடைய ஆலோசனையைச் சொல்லிக் கொள்ளுகிறேன். சபா நாயகர் அவர்கள் 28-ம் தேதியையே நிர்ணயித்து, தொடர்ந்து விவாதம் முடிவாகும் வரையில் நடத்தலாம். ஆனால், 28, 29- இரண்டு நாட்கள் போதும் என்று நான் கருதுகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த பிறகு, அதை உடனடியாக விவாதம் செய்து முடிவு செய்வது நல்லது. முடிவு எவ்விதமானதாக இருக்கும் என்பதைப் பற்றி எனக்கு சந்தேகமில்லை. இந்த விவாதத்தினுல் எதிர் கட்சிக் காரர்களுடைய மனச் சோர்வும் ஏமாற்றமும் நீங்கினுல், அதனுல் ஒரு நன்மை ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில் இது எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. எதிர் கட்சி அங்கத்தினர்களிடையே இந்த விவாதமானது ஒரு புதிய உற்சாகத்தை ஏற்படுத்துமானால் அதை நான் வரவேற்கிறேன். இதை எவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

The hon. Member Sri M. Kalyanasundaram rose.

MR. SPEAKER : How is the hon. Member entitled to make a speech now?

[26th October 1957

SRI M. KALYANASUNDARAM : Sir, I want to make a submission.

MR. SPEAKER : The hon. Member can only ask for the leave of the House to move his Motion of No-Confidence. Any speech that he wants to make can be made only on the day fixed by the Chair. I have asked the Hon. Leader of the House to give his suggestion in respect of that matter only for the convenience of the House. The Chair will fix the time for it and there can be no discussion at this stage.

SRI M. KALYANASUNDARAM : On a point of personal explanation, Sir . . . .

MR. SPEAKER : No allegation has been made against the hon. Member. In fact, the Hon. Leader of the House has stated that he did not take part at the meeting of the Business Advisory Committee.

I fix 10 o'clock or after question-time on the 28th of October for the discussion of this No-Confidence Motion. I think two days will be enough. I therefore allot 28th and 29th of October for the discussion of this Motion.

Sri M. Kalyanasundaram rose.

MR. SPEAKER : I am sorry I cannot allow the hon. Member to speak now. He knows the procedure and he is an experienced politician. He has been in the Assembly longer than I have been.

III.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER *RE* :

(1) NOMINATION OF PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : I have to make the following announcement :—

Under rule 14 (1) of the Madras Assembly Rules, I nominate the following hon. Members to be the panel of Chairmen for the current session :—

1 Dr. Srimathi T. S. Soundaram Ramachandran,
2 Sri M. P. Subramaniam,
3 ,, K. Ramachandran and
4 ,, P. S. Chinnadurai.

(2) MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have also to announce to the House the following messages, dated 15th, 16th and 18th October 1957, received from the Governor of Madras :—

(1) " In pursuance of Article 207, clause (1), read with Article 199, clause (1), of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Transferred Territory (Re-enacting) Bill, 1957."